# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**செ.வெ.எண் : 218** **நாள்: 29.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி ப் பகுதிகளில் தடைசெய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் இருப்பு வைத்திருப்பவர்கள் 31.12.2018 திங்கட்கிழமைக்குள் மாநகராட்சி வார்டு அலுவலங்களில் ஒப்படைக்க வேண்டும் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் விதி எண் 110ன் கீழ் வருகின்ற 01.01.2019 அன்று முதல்** தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்துள்ளார்கள்.

அதனடிப்படையில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பொருட்களான உணவுப்பொருட்களை கட்ட பயன்படுத்தும் பிளாஸ்டிக் தாள், பிளாஸ்டிக்காலான தெர்மாக்கோல் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் குவளைகள், பிளாஸ்டிக் குவளைகள், நீர் நிரப்ப பயன்படும் பைகள்/பொட்டலங்கள், பிளாஸ்டிக் தூக்கு பைகள், பிளாஸ்டிக் கொடிகள், பிளாஸ்டிக் விரிப்புகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் தட்டுகள், பிளாஸ்டிக் தேநீர் குவளைகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள், நெய்யாத பிளாஸ்டிக் பைகள் போன்ற 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் 01.01.2019 முதல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

**அதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடைசெய்வது குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ரிப்பன் மாளிகையில் இன்று (29.12.2018) நடைபெற்றது.**

**மேற்குறிப்பிட்ட தடைசெய்யப்பட்ட 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களை பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடமிருந்து அவர்களது பகுதிக்குட்பட்ட வார்டு அலுவலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியால் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தங்களது வீடு, அலுவலகம், தொழிற்கூடங்கள், வியாபார நிர்வணங்கள் மற்றும் உணவு வீடுதிகள் உள்ள தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தங்களது பகுதிக்குட்பட்ட வார்டு அலுவலங்களில் 31.12.2018 திங்கட்கிழமைக்குள் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

**01.01.2019 முதல் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்தாலோ, விற்பனைசெய்தாலோ, சேமித்துவைத்தாலோ அல்லது பயன்படுத்தினாலோ அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சியால் மண்டல அளவில் மண்டல அலுவலர், செயற்பொறியாளர், மண்டல சுகாதார அலுவலர், உதவி வருவாய் அலுவலர், வட்டாசியர், உதவி காவல் ஆணையாளர் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஆகியோரைக்கொண்ட சிறப்பு குழுவும், கோட்ட அளவில் உதவி செயற்பொறியாளர், சுகாதார ஆய்வாளர், துப்புர ஆய்வாளர் மற்றும் வரிவசூலிப்பாளர் ஆகியோரைக்கொண்ட குழுவும் அமைக்கப்பட்டு உள்ளது.**

மேலும் இந்த சிறப்புக்குழுக்களால் பொதுமக்கள், பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள், வியாபாரிகள், தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரிடையே தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும்.

மாநாகராட்சி பணியாளர்களால் வீடுகள்தோறும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்படும் . இவ்வாறு பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து பறிமுதல் செய்யப்படும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் தார் சாலைகள் அமைக்க பயன்படுத்தப்படும்.

இவ்வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக வாழையிலை, பாக்குமர இலை, அலுமினியத்தாள், காகித சுருள், தாமரை இலை, கண்ணாடி/உலோகத்தால் ஆன குவளைகள், மூங்கில்/மரப்பொருட்கள், காகித குழல்கள், துணி/காகிதம்/சணல் பைகள், காகித/துணி கொடிகள், பீங்கான் பாத்திரங்கள், மண் கரண்டிகள் மற்றும் மண் குவளைகள் போன்ற 12 வகையான பொருட்களை பயன்படுத்தி பிளாஸ்டிக் மாசில்லா சென்னையை உருவாக்க பொதுமக்கள் அனைவரும் தங்களது முழு ஒதுழைப்பை அளிக்கவேண்டும் என ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (பணிகள்) திரு, எம், கோவிந்தராவ் இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திரு.பி.குமாரவேல் பாண்டியன் இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள், முதன்மை தலைமை பொறியாளர் திரு.எம்.புகழேந்தி, தலைமை பொறியாளர் (கட்டடம்) திரு.எம். மகேசன், மேற்பார்வை பொறியளாளர் திரு.எல்.நந்தகுமார், மண்டல அலுவலர்கள் மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**